இன்றைய வேளாண் செய்திகள்

14.02.2013 A.M

## இந்திய மனித வளத்தை 62 நாடுகள் நம்பி உள்ளன: வேளாண் பல்கலை. துணைவேந்தர்

உலகளவில் சுமார் 62 நாடுகள் இந்தியாவின் மனித வளத்தை நம்பியே செயல்பட்டு வருகின்றன என, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் துறை சார்பில், வேளாண் உயிரி தொழில்நுட்பக் கருத்தரங்கு புதன்கிழமை நடைபெற்றது.

சுமார் 90-க்கும் மேற்பட்ட இறுதியாண்டு உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் துறை இளநிலை தொழில்நுட்ப மாணவ-மாணவியர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கை தொடங்கி வைத்து, வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது:

இந்தியாவில் சுமார் 58 கோடி இளைஞர்கள் உள்ளனர். உலகளவில் சுமார் 62 நாடுகள் இந்தியாவின் மனித வளத்தை நம்பியே செயல்பட்டு வருகின்றன. இந்திய வேளாண்மையில் உணவுப் பாதுகாப்பு, உணவு உற்பத்தி நிலைப்புத் தன்மை ஆகிய இரண்டுமே சவால்களாக அமைந்துள்ளன. பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் எளிதாக அந்த சவால்களைச் சமாளிக்க முடியும்.

அத்தகைய அணுகுமுறை குறித்த அறிவையும், விஞ்ஞானப் பூர்வமான பங்களிப்பையும் மாணவ சமுதாயம் நன்கு அறிந்து கொள்ள இக்கருத்தரங்கு வழிவகுக்கும்.

இதுவரை, பல்லைக்கழகம் வெளியிட்ட பல்வேறு பயிர்களின் வீரிய ஒட்டு ரகங்கள், விவசாயிகளால் சாகுபடி செய்ய இயலாமைக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும்.

வேளாண்மையில் மாறிவரும் மனித வள ஆற்றல் தேவைகளுக்கேற்ப பாடத் திட்டங்களை மாற்றியமைக்க பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்றார்.

அமெரிக்காவின் டூபாண்ட்-பயனீர் நிறுவன முதுநிலை இயக்குநர் ஜான் டியூசிங் பேசுகையில், "உலகளவில் உணவுத் தேவை ஒரு பெரிய சவாலாக உள்ளது. இந்தியாவின் தொலைநோக்கு அறிவியல் பற்றியும் அதனோடு தொடர்புடைய நோக்கத்தையும் செயல்படுத்த டூபாண்ட் பயனீர் நிறுவனம் தயாராக உள்ளது' என்றார்.

பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப இயக்குநர் ப.சுப்பிரமணியன், பயிர் உயிரி தொழில்நுட்பத் துறை பேராசிரியர் எஸ்.கிருஷ்ணவேணி, டூபாண்ட் அறிவு மைய நிர்வாகி அனுராதா சுப்பிரமணியன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தேயிலை விவசாயிகளின் கருத்துகளைக் கேளுங்கள்! விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தல்

தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வதில் சிறு, குறு தேயிலை விவசாயிகளின் கருத்துக்களையும் கேட்க வேண்டும் என்று விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக தே யிலை விவசாயிகளின் கருத்துக் கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் மஞ்சூர் எச். கே.அறக்கட்டளை கட்டடத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

÷இந்தக் கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை மேலாண்மை ஆராய்ச்சிக் கழக ஒருங்கி ணைப்பாளர் டாக்டர் மாதுரிமா தாஸ் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் பங்கேற்று, பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

÷கூட்டத்தில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு தேயிலை ஆலை அங்கத்தினர் நலச்சங்க தலைவர் டி.பி.ராமன் பேசியது:

÷இந்தியாவிலேயே நீலகிரி மாவட்டத்தில் தான் அதிக அளவில் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். பசுந்தேயிலைக்கு கட்டுபடியான, நிலையான விலை கிடைக்காததால் தேயிலை விவசாயத்தை நம்பியுள்ள லட்சக் கணக்கான மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

÷இந்நிலையில் உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்படி பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

÷பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யும் ஆலோசனைக் குழுவில் சிறு, குறு தேயிலை விவசாயிகளுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் இருப்பது வருத்தமளிக்கிறது.

÷தேயிலை வாரியம், தேயிலை ஆலை நிர்வாகங்கள், தேயிலை வர்த்தகர்கள் உள்ளி ட்டோர் இந்தக் குழுவில் இடம்பெறும் நிலையில், விவசாயிகளுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் இருந்தால், அவர்களின் கருத்துகளையும், வாழ்வாதாரப் பிரச்னைகளையும், தேயிலை சாகுபடியில் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளையும் வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

÷விவசாயிகளின் நலன் கருதி அமைக்கப்பட்ட விலை நிர்ணயக்குழுவில் சிறு, குறு, தேயிலை விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் கருத்துக்களையும் கேட்க வேண்டும். மேலும் பசுந்தேயிலை உற்பத்தி செய்ய பராமரிப்பு, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி உள்ளிட்ட

செலவுகளைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் ஒரு கிலோ பசுந்தேயி லைக்கு ரூ. 40 வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

÷இக்கூட்டத்தில் குந்தா பகுதிக்கு உள்பட்ட பிக்கட்டி, முள்ளிகூர், மேல்குந்தா, எடக்காடு, முள்ளிமலை, கீழ்குந்தா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சிறு, குறு தேயிலை விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம் 34 அடியாக சரிவு: குடிநீர் பிரச்னை ஏற்பட வாய்ப்பு

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 34 அடியாக சரிந்துவிட்டதால், வரும் நாள்களில் குடிநீர்ப் பிரச்னையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஈரோடு மாவட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. இதன்மூலம் சத்தி, கோபி, பவானி, ஈரோடு, பெருந்துறை, காங்கயம் மற்றும் கரூர் மாவட்டம்- அரவக்குறிச்சி ஆகிய ஏழு வட்டங்களில் உள்ள சுமார் 2 லட்சம் ஹெக்டர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. நன்செய்ப் பாசனமான நெல் சாகுபடிக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 15 வரை கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மூலம் தொடர்ந்து 24 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடப்படும். புன்செய்ப் பாசனமான கடலை, எள் சாகுபடிக்கு ஜனவரி 7 முதல் ஏப்ரல் 30 வரை 12 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடப்படும்.

பவானிசாகர் அணையின் நீர்மட்டக் கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறும் சகதியும் உள்ளடங்கும். புதன்கிழமை இரவு 7 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 34.66 அடியாக உள்ளது. அதாவது 1.60 டிஎம்சி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு வெறும் 13 கனஅடி மட்டுமே. அணையில் இருந்து ஆற்றுக்கு 150 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது.

ஈரோடு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, சாகுபடிப் பயிர்களைக் காக்க கால்வாய்க்கு நாள்தோறும் 2000 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. இது வரும் 17-ஆம் தேதி வரை நீடிக்கும். புதன்கிழமை இரவு நிலவரப்படி 1500 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

30 அடி அணை நீர்மட்டத்தில் கால்வாய் மதகும் 34 அடி மட்டத்தில் அணையின் நீர்மட்டமும் உள்ளதால், தண்ணீர் வெளியேறுவதில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. குறைந்த நீர்மட்டத்தால் போதிய அழுத்தம் கிடைக்காமல் தண்ணீர் வெளியேறாது என்று பொதுப்பணித் துறையினர் கவலை அடைந்துள்ளனர்.

கோடை துவங்கும் முன்பே வறட்சி நிலவுவதால் மே இறுதிவரை நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பில்லை. இதனால் தண்ணீர் சகதியாகவும் சூடாகவும் மாறும். எனவே அணையில் உள்ள மீன்களின் நிலைமை குறித்து மீனவர்கள் கவலையடைந்துள்ளனர்.

## கர்நாடகம் திறந்துவிட்ட நீர் 5 நாள்களுக்குப் பின் எல்லையை அடைந்தது

காவிரியில் கர்நாடகம் திறந்துவிட்டதாகக் கூறப்படும் தண்ணீரானது 5 நாள்களைக் கடந்த பின், தமிழக எல்லையை வந்தடைந்தது. காவிரியின் எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவை இன்று காலை வந்தடைந்ததாகத் தெரிகிறது. இருப்பினும் தண்ணீர் வரத்து குறைந்தே காணப்பட்டது.

மத்திய நிபுணர் குழு பரிந்துரைப்படி தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடகத்துக்கு பிப்ரவரி 7ஆம் தேதி உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம். இதன்படி, சனிக்கிழமை விநாடிக்கு 1,250 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், இந்தத் தண்ணீரானது புதன்கிழமை இரவு வரை தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவுக்கு வந்து சேரவில்லை. இந்நிலையில் இன்று காலை தண்ணீர் வரத்து இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கோடை வரும் பின்னே; தர்ப்பூசணி வரும் முன்னே




பனிக்காலம் முடியும் முன்பே கடும் வெயில் அடிக்கத் தொடங்கியதால் தாகம் தணிக்கும் தர்ப்பூசணி விற்பனைக்கு விழுப்புரத்தில் குவிந்துள்ளன.

÷கோடை காலம் தொடங்க இன்னும் 2 மாதங்கள் உள்ள நிலையில், அதிக பனிப்பொழிவு இருக்க வேண்டிய பிப்ரவரி மாதத்திலேயே பனியின் தாக்கம் குறைந்து, காலை 7 மணிக்கே வெயில் அடிக்க தொடங்கிவிடுகிறது.

÷குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்தில் பகல் நேரங்களில் லேசான காற்றுடன் கடும் வெயில் அடிக்கிறது.  வழக்கமாக ஆண்டுதோறும் தர்ப்பூசணி சீஸன் மார்ச் இரண்டாவது வாரத்தில் தொடங்கி ஜூலை வரை நீடிக்கும். ஆனால் நடப்பாண்டில் முன்னதாகவே சீஸன்

தொடங்கியதால், கோடையில் மக்களின் தாகத்தைத் தணிக்கும் வகையில் விழுப்புரத்தில் தர்ப்பூசணி வரத்து தொடங்கியுள்ளது.

÷விழுப்புரத்தைச் சுற்றியுள்ள வெங்கண்டூர், ஆலம்பாடி, திருக்கோவிலூர், செஞ்சி, திண்டிவனம், மரக்காணம் மற்றும் சுற்றுப்பகுதிகளிலிருந்து விழுப்புரத்துக்கு தர்ப்பூசணி பழங்கள் விற்பனைக்கு வருகின்றன.

÷டன் ரூ.6,500 முதல் ரூ.7,000 வரை மொத்த வியாபாரிகள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றனர். விழுப்புரத்தில் புதுச்சேரி சாலையில் தர்ப்பூசணி சாலையோரங்களில் குவித்து வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். ஒரு பீஸ் ரூ. 5 ரூபாய்க்கும், முழுப் பழமாக வாங்கினால் கிலோ ரூ. 6 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

÷இது குறித்து வியாபாரி பெருமாள் கூறியது: பனிக்காலம் முடியும் முன்பே வெயில் அடிக்கத் தொடங்கியதால், தர்ப்பூசணிப் பழங்களை விழுப்புரம் சுற்றுப்பகுதியில் கொள்முதல் செய்துள்ளோம். அடுத்த மாதம் இரண்டாவது வாரம் விளைச்சல் அதிகரிப்பதால் பழங்கள் பெரிய அளவில் இருப்பதுடன் விலையும் குறையும். தற்போது அடித்துவரும் வெயிலால் விற்பனை சூடுபிடித்துள்ளது. ஜூலையில் சீஸன் உச்சகட்டத்தில் இருக்கும். அடுத்த மாதம் முதல் விலை குறைய வாய்ப்புள்ளது. என்றார்.

## விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றும் தெளிப்பு நீர் பாசனம்!



விவசாயத்தை விட்டு வெளியேறிவருபவர்களை மீண்டும் விவசாயத்துக்கு அழைத்துவரும் வகையில் தெளிப்புநீர் பாசனம் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாறு, செய்யாறு, வேகவதி உள்ளிட்ட ஆறுகள் ஒருகாலத்தில் வற்றாத ஜீவநதியாக திகழ்ந்தன. இதில் செய்யாறு, வேகவதி உள்ளிட்ட ஆறுகள் பாலாற்றில் கலந்து மாவட்டம் முழுவதும் பாசனத்தை பலப்படுத்தியது. ஒரு காலத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு அடுத்த இடத்தில் நெல் உற்பத்தியில் காஞ்சிபுரம் மாவட்டம் சிறந்து விளங்கியது.

÷காலப்போக்கில் காஞ்சிபுரம் மாவட்டம் அந்த பெருமையை படிப்படியாக இழந்து வருகிறது. கடந்த 20 ஆண்டுகளாக பாலாறு உள்ளிட்ட ஆறுகளில் பெயர் அளவுக்குக்கூட தண்ணீரை பார்த்ததில்லை என்று விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இதனால் ஆற்றுப்பாசனம் முற்றிலுமாகத் தடைப்பட்டது.

÷ஆற்றில் நீர்போக்கு தடைபட்டதால், நிலத்தடி நீரும் அதலபாதாளத்துக்குச் சென்றது. இதனால் கிணற்று பாசனமும் கேள்விக்குறியானது. இதில் மின்வெட்டு பிரச்னையும் விவசாயிகளை மிகுந்த கவலையில் ஆழ்த்தியது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை விட்டு, விளைநிலங்களையும் விற்பனை செய்துவிட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் நாள்தோறும் புதிதுபுதிதாக முளைத்துவரும் பன்னாட்டு நிறுனவங்களுக்கு அடிமையாகி வருகின்றனர்.

நுண்ணீர் பாசனம்: இந்த நிலைமை நாடு முழுவதும் இருப்பதாக நபார்டு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நிறுவனங்கள் மத்திய அரசுக்கு ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தன. இதைத் தொடர்ந்து முழு மானியத்தில் நுண்ணீர் பாசனங்களான சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசனத்திட்டத்தை அறிமுகம் செய்தது.

இதை அந்தந்த மாநில அரசுகள் நிறைவேற்றும் என்று அறிவித்தது. இதைத் தொடர்ந்து கடந்த ஓராண்டுக்கு மேலாக இந்த நுண்ணீர் பாசனம் இருந்தாலும் அது பெரிய அளவில் விவசாயிகளைச் சென்றடையவில்லை. இப்போது நூண்ணீர் பாசனத் திட்டத்தை முழுவீச்சில் செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டது.

÷இந்த நிலையில் காஞ்சிபுரத்தில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியப் பகுதியான புரிசை கிராமத்தில் நூண்ணீர் பாசனமான தெளிப்புநீர் பாசனத்தில் ஈடுபட்டு விவசாயி தனஞ்செயன், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறார்.÷இவர் தெளிப்பு நீர் பாசனம் மூலம் சம்பங்கி, ரோஜா, மல்லிகை, கத்தரி, வெண்டை உள்ளிட்ட தோட்டப்பயிர்களை கடந்த ஓராண்டுக்கும் மேலாக பயிரிட்டு வருகிறார். இதில் தண்ணீர் மிச்சப்படுத்தப்படுவதுடன், நல்ல மகசூல் கிடைப்பதாகவும், நல்ல விலை கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

÷இதுகுறித்து அவர் மேலும் கூறியது: விவசாயத்துக்கு போதிய அளவு தண்ணீர் இல்லாததால், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்தை விட்டுவிட்டு, ஸ்ரீபெரும்புதூரில் உள்ள பன்னாட்டு நிறுவனத்துக்கு வேலைக்குச் சென்றுவிடலாம் என்று வேலை தேடிவந்தேன்.

அப்போது நுண்ணீர் பாசனம் குறித்து தகவல் அறிந்தேன். விவசாயத்துறை அதிகாரிகளிடம் இதுகுறித்து கேட்டு தகவல்களைப் பெற்றேன். அதிகாரிகளும் எனக்கு முழு ஒத்துழைப்பு அளித்தனர். பூக்கள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தோட்டப் பயிர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

அதன்படி எனது விளைநிலத்தைப் பார்த்த அதிகாரிகளின் முழு மானியத்தில் தெளிப்பு நீர் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தனர். வாய்கால் பாசனத்தின் மூலம் 1 ஏக்கருக்கு பாய்ச்சப்படும் நீரைக் கொண்டு, தெளிப்பு நீர் பாசனத்தின் மூலம் 6 ஏக்கர் வரை பாய்ச்ச முடிகிறது. இதனால் தண்ணீர் சேமிப்பு, மின்சாரம் சேமிப்பு, பணம் சேமிப்பு ஆகியன சாத்தியமாகின்றன.

÷பயிரிடும் காய்கறிளைப் சென்னை மாம்பலம் காய்கறிச்சந்தையில் இருந்து நேரடியாக வந்து பெற்றுச் செல்கின்றனர். நல்ல விலையும் கிடைக்கிறது. மேலும் காஞ்சிபுரம் மலர்கள் சந்தையில் இருந்து சம்பங்கி, மல்லி ஆகிய பூக்களை பெற்றுச் செல்கின்றனர்.

இதன்மூலம் தெளிப்புநீர் பாசனம் என் வாழ்க்கை பயணத்தையே மாற்றிவிட்டது என்றார். இவரைப் போலவே அதே கிராமத்தைச் சேர்ந்த முருகவேல், சிறுவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மகேஷ் ஆகியோர் தெளிப்புநீர் பாசனத்தில் பயனடைந்துள்ளனர்.

## பூச்சித் தாக்குதலில் இருந்து மா மரங்களை காப்பது எப்படி?



முக்கனிகளில் முதலாவதானது மாம்பழம் ஆகும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்த இந்த கனி, சுவை மட்டுமல்லாமல் பல்வேறு சத்துகளையும் கொண்டது.

÷மாம்பழத்தில் "ஏ', "சி' மற்றும் "இ' வைட்டமின்கள் அதிகமாகக் காணப்படுகிறது. ÷இவ்வாறு பல்வேறு சிறப்புகளைக் கொண்ட மாம்பழ மரங்களை பூச்சிகளிலிருந்து பாதுகாப்பது குறித்து இங்கு காண்போம்.

÷புதுச்சேரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் "மா' பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது உள்ள தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போல அவற்றை முறையாக பராமரித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தினால் கூடுதல் லாபம் பெற முடியும்.

÷மாம்பழத்தில் நீலம், பெங்களூரா (தோத்தாப்புரி), அல்போன்சா, ருமானி, பங்கனப்பள்ளி, காலாப்பாடி, பீத்தர், செந்தூரா, ஜஹாங்கீர், மல்கோவா, இமாயுதீன், அர்கா அன்மால், அர்கா அருணா, அர்கா நீல்கிரன், அர்கா புனீத், அமரப்பள்ளி, பி.கே.எம் 1, பி.கே.எம் 2, பையூர் 1, மல்லிகா, சிந்து மற்றும் ரத்னா ஆகிய ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

÷இவற்றில் மல்லிகா, சிந்து, ரத்னா மற்றும் பி.கே.எம் 2 போன்ற இரகங்கள் உயர் ரகங்களாகவும், கேசர் மற்றும் அமரப்பள்ளி போன்ற ரகங்கள் சுவை மற்றும் அதிக விளைச்சல் தரும் ரகங்களாகவும் உள்ளன. மல்லிகா மற்றும் சிந்து ரகங்கள் விதையில்லாதது. தற்போது மாமரங்களில் பூக்கள் பூத்துள்ளன. ஆனால் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு மாமரங்களில் பூக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

÷அதே போல், மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதும் குறைந்துள்ளது. இதன் காரணமாக மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலையில் அதிக அளவு வித்தியாசம் இருப்பதும் பனிப்பொழிவுடன் குளிர்நிலை நிலவுவதும் தான் இதற்கு காரணம் என்று விவசாய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

÷இந்நிலையில் மாமரத்தின் பூக்களின் எண்ணிக்கை மற்றும் விளைச்சலை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள், பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை வல்லுநர் நி.விஜயகுமார் கூறியது:

÷மாமரம் இதுவரை பூக்காமல் இருந்தால், 0.5 சதவீத யூரியா கரைசல் (5 கிராம் யூரியா ஒரு லிட்டர் நீருக்கு) அல்லது ஒரு சதவீத பொட்டாசியம் நைட்ரேட் கரைசல் (10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் ஒரு லிட்டர் நீருக்கு) என்ற அளவில் பிப்ரவரி மாதம் 15 தேதிக்குள் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உருவாக வாய்ப்புண்டு.

÷பூக்கள் பூத்திருக்கும் மாமரங்களில் நாப்தலின் அசிட்டிக் அமிலம் தெளிப்பதால் அதிக பிஞ்சுகள் உருவாவதோடு, பிஞ்சுகள் உதிர்வதும் தடுக்கப்படும்.

÷அதே நேரத்தில் பிஞ்சுகள் உருவாகியுள்ள மாமரங்களில் 2 சதவீத பொட்டாசியம் நைட்ரேட் தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு பழங்கள் உற்பத்தி அதிகரிக்கும். மாமரத்

தோப்புகளில் தோழமை தாவரங்களான சீத்தாப்பழக் கன்றுகள் மற்றும் ஆமணக்குச் செடிகளை பயிரிடுவதால் கூடுதல் வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன.

பூச்சிகளும்,

கட்டுப்படுத்தும் வழிகளும்...

தத்துப் பூச்சி: மாமரங்களை மூன்று விதமான தத்துப் பூச்சிகள் தாக்குகின்றன. மாமரத்தின் கிளைகளில் தத்துப் பூச்சியின் தாக்குதலை எளிதாக கண்டறிய முடியும். தத்துப் பூச்சியின் தாக்குதலினால் பூக்களின் எண்ணிக்கை குறைவதோடு பூக்களிலும் அதன் பாதிப்பு ஏற்படும்.

÷தத்துப் பூச்சியின் தாக்குதல் குறைவாக இருப்பின் 3 சதவீத வேப்ப எண்ணை ஒரு லிட்டர் நீருக்கு 5 மிலி அல்லது வேப்பம் சோப்பு ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

÷தத்துப் பூச்சியின் தாக்குதல் மத்திமமாக இருப்பின், ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் "பெவேரியா பேஸியானா' என்ற உயிரக பூஞ்சாண மருந்தினை அதிக திறன் உள்ள தெளிப்பான் மூலம் தெளிப்பு வேகத்தை குறைத்து மாமரம் மற்றும் பூக்களின் மீது தெளிப்பதால் தத்துப் பூச்சிகள் அழியும். தாக்குதல் அதிகமாக இருப்பின், "அசிபேட் 75 எஸ்.பி.' ஒரு கிராம் ஒரு லிட்டர் நீருக்கு அல்லது "கார்பரைல் 50 டபில்யு.பி'-ஐ ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் பூ உருவாகும் சமயத்தில் ஒரு முறையும், 15 நாள்கள் கழித்து இரண்டாவது முறையும் பூக்களின் மீது தெளிக்க வேண்டும்.

÷ இது மட்டும்மல்லாமல் நனையும் கந்தகம் 2 கிராம் ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளித்தால் செஞ்சிலந்தியின் தாக்குதலை தடுக்க முடியும்.

பிணைக்கும் புழு: பிணைக்கும் புழுவானது மாமரங்களின் பூக்களில் தமது எச்சத்தினால் கூடுகள் கட்டி வலை போல் பின்னி பூக்களை உண்பதால் மகசூல் பாதிக்கப்படுகின்றது. இதனால் பூக்களில் மகரந்தச்சேர்க்கை நடைபெறுவதும் தடுக்கப்படும்.

÷பிணைக்கும் புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த "பேசலோன் 35 இ.சி' 2 மிலி ஒரு லிட்டர் நீருக்கு அல்லது "புரப்னோபாஸ்' 2 மிலி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் பூக்களின் மீது தெளிக்க வேண்டும்.

இலைக் கொப்புளம் மற்றும் அசுவுணி: இலைக் கொப்புளம் மற்றும் அசுவுணியைக் கட்டுப்படுத்த "டைமித்தோயேட்' 2 மிலி ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

கரையான்: மாமரத் தோப்புகளில் கரையான் புற்றுகளை அழிக்க சோற்றுக்கற்றாழை செடிகளை நடலாம். மேலும் மாமரங்களில் தோன்றும் கரையானை அழிக்க சிறிதளவு சர்க்கரைக் கரைசலை மரத்தின் மீது தெளிப்பதால் செவ்வெறும்புகள் சர்க்கரையை தேடிவந்து கரையான்களை தூக்கிச் செல்லும்.

பழ ஈ: மாமரத்தின் பழங்களில் தோன்றக்கூடிய பழ ஈயை கட்டுப்படுத்த பிரத்தியேக இனக்கவர்ச்சி பொறியினை ஒரு ஏக்கருக்கு 2 என்ற அளவில் பூக்கும் தருணத்தில் வைத்துவிட வேண்டும்.

÷இதனால் பழ ஈக்கள் பூ பூக்கும் தருணத்தில் முட்டையிடுவது தவிர்க்கப்பட்டு இனகவர்ச்சிப் பொறியினால் அவை ஈர்க்கப்பட்டு அழிக்கப்படும் என்றார் அவர்.

இன்றைய வேளாண் செய்திகள்

14.02.2013 A.M

## விவசாயிகளுக்கு இடு பொருள் வழங்கும் விழா

வேடசந்தூர்:மாரம்பாடி கிராமம் பெரியகுளத்துப்பட்டியில் ஆயக்கட்டு விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் அயம்வாம் திட்டத்தின் கீழ் இடு பொருள் வழங்கு விழா நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் தலைமை வகித்தார் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுருளியப்பன், ஆயக்கட்டு பகுதி தலைவர் தனிஸ்லாஸ்,சேகர்,மற்றும் விவசாயிகள் பேசினர். வேளாண் அலுவலர் கதிரேசன் நன்றி கூறினார். ஏற்பாட்டை உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் செய்திருந்தார்.

## வறட்சி நிவாரணம் ரூ.25 ஆயிரம் தேவைதி.மு.க., நிர்வாகிகள் கூட்டத்தில் வலியுறுத்தல்

தாராபுரம்: தாராபுரம் நகர, ஒன்றியம் சார்பில் நடந்த தி.மு.க., நிர்வாகிகள் கூட்டத்தில், "தாராபுரம் பகுதியில் கடும் வறட்சியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக ஒரு ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென, தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

தாராபுரம் நகர, ஒன்றிய தி.மு.க., நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட துணைச்செயலாளர் பெரியசாமி தலைமையில் நடந்தது.நகர செயலாளர் தனசேகர், ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வக்கீல் அணி அமைப்பாளர் செல்வராஜ் வரவேற்றார்.

திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்க வேண்டும்.மார்ச் ஒன்றாம் தேதி, தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் மணி விழாவையொட்டி கொடியேற்றுதல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், ரத்ததான முகாம், முதியோர் இல்லங்களுக்கு உணவு வழங்குதல், தலைமை கழகம் நிர்ணயம் செய்துள்ள தேர்தல் நிதியை வசூலித்தல் உட்பட பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

மாவட்ட பிரதிநிதி அன்புமுத்துமாணிக்கம், மதி, மாரிமுத்து, யூசுப், ராஜேந்திரன், பகவதிராசு, கண்ணபிரான் உட்பட பலர் பங்கேற்றனர்.

### தக்காளி வரத்து திடீர் அதிகரிப்பு15 கிலோ கூடை ரூ.60க்கு விற்பனை

ஈரோடு: வரத்து அதிகரிப்பால், ஈரோடு மார்க்கெட்டில், 15 கிலோ தக்காளி கூடை, 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் மொத்தம், 736 காய்கறி கடைகள் உள்ளன. இங்குள்ள கடைகளுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பலவிதமான காய்கறிகள் விற்பனைக்காக வருகின்றன.
கடும் வறட்சியால் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் ஒரு கிலோ, 15 முதல், 25 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, கர்நாடகா, பெங்களூரு, தர்மபுரி, ஒசூர் உள்ளிட்ட பகுதியில் இருந்து தக்காளி அதிளவில் ஈரோடு மார்க்கெட்டுக்கு வருகிறது.ஈரோடு தக்காளி வியாபாரி ஒருவர் கூறியதாவது:
ஒசூர், பெங்களூரு மற்றும் கர்நாடகத்தின் பல பகுதிகளில் தக்காளி விளைச்சல் நன்றாக உள்ளது. இந்த பகுதிகளில் இருந்து அதிகப்படியான தக்காளிகள் தமிழகம் முழுவதும் விற்பனைக்காக செல்கின்றன.இதனால், கூடைக்கு, 15 கிலோ எடையளவு தக்காளி அடுக்கி வருகிறோம். ஈரோட்டை சுற்றியுள்ள மொத்த வியாபாரிகள் கூடை ஒன்று, 60 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

### பயிரை காப்பாற்ற வலியுறுத்தல்

கோத்தகிரி:"விவசாய பயிர்களை பாதுகாக்க காட்டெருமைகளை காட்டுக்குள் விரட்டவேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலையை அடுத்து, சிறிய விளை நிலங்களில் காரட், பீட்ரூட், உருளைக் கிழங்கு, பீன்ஸ் உள்ளிட்ட மலைக்காய்கறி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன், கக்குச்சி - கலிங்கனட்டி பகுதியை சேர்ந்த விவசாயி, ஒரு ஏக்கர் பரப்பளவில் அறுவடைக்கு தயாரான காரட் தோட்டத்தை, 1.25 லட்சம் ரூபாய்க்கு விலை பேசி முன்பணம் பெற்றார். அங்கு இரவில் வந்த காட்டெருமைகள் காரட்டை நாசம் செய்தன.

இப்பகுதியில் அரசு துறையினர் ஆய்வு நடத்தினர். இதேபோன்று பல இடங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

எனவே, "காட்டெருமைகளை அடர்ந்த காட்டுக்குள் விரட்ட சம்மந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## திறந்த நெல் கொள்முதல் நிலையங்களில்...போணியாகல!

திருச்சி: நடப்பாண்டு சம்பா நெல் சாகுபடி பாதிக்கப்பட்டதால், திருச்சி மாவட்டத்தில் திறக்கப்பட்ட, ஆறு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், இதுவரை, ஒரு கிலோ நெல் கூட கொள்முதல் செய்யப்படவில்லை.திருச்சி மாவட்ட நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் ஆண்டு தோறும், குறுவை, சம்பா சாகுபடி சமயங்களில், நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். திருச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு, 30க்கும் மேற்பட்ட இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன.2011ம் ஆண்டு காவிரி ஆற்றில் முழுமையாக நீர் திறந்ததால், கடந்த ஆண்டு சம்பா சாகுபடி சிறப்பாக அமைந்தது. இதனால், நெல் உற்பத்தி அதிகமானது. கொள்முதல் நிலையங்கள் அதிகளவு திறக்கப்பட்டன. ஆனால், நடப்பாண்டு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.2012 ஜூன் மாதம் மேட்டூர் அணை திறப்பு தள்ளிப்போனது. இதனால், குறுவை சாகுபடி தாமதமானது. தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால், குறுவை நடவும் தாமதமானது. அறுவடை செய்யும் முன், நீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதனால், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது.சம்பாவை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர். இயற்கையும், கர்நாடகா அரசும் வஞ்சித்ததால், தண்ணீரின்றி சம்பா சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். குறிப்பிட்ட சில இடங்களில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்தனர். ஆயினும், போதிய தண்ணீர் வரத்து இல்லாததாலும், மழை இல்லாததாலும், பயிரை காக்க முடியாத பரிதாப சூழல் ஏற்பட்டது.தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சி மாவட்டத்தில், கடந்த ஜனவரி மாதம் லால்குடி, வாளாடி, அன்பில், பெருவளநல்லூர், ஆலங்குடி மஹாஜனம், பூவாலூர் ஆகிய, ஆறு இடங்களில் மட்டுமே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்தது. ஆனால் இதுவரை, ஒரு கிலோ நெல் கூட கொள்முதல் நிலையத்துக்கு வரவில்லை. தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் மட்டுமே சொற்ப அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.இதுகுறித்து லால்குடி அருகே மாங்குடியைச் சேர்ந்த விவசாயி செல்லப்பா, 72, கூறியதாவது:மாங்குடி, ஆலங்குடி சேர்த்து, 1,357 ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மாங்குடியில், 10 ஆயிரம் மூடை நெல்லை, விவசாயிகள் கொள்முதல்

நிலையத்தில் விற்பனை செய்வர். நடப்பாண்டு, ஒரு கிலோ நெல் கூட கொடுக்க முடியவில்லை.எனது வாழ்நாளில் இதுபோன்ற நிலையை கண்டதில்லை. கடும் வறட்சி காலங்களில் கூட, 4 ஏக்கராவது சாகுபடி நடந்தது. இந்த ஆண்டு சுத்தமாக எதுவும் செய்யவில்லை. சில இடங்களில் விவசாயிகள் தங்களது உணவுத் தேவைக்காக விதைத்த நெற் பயிரையும், மயில்கள் வேட்டையாடிவிட்டன.உணவுக்கே வெளியில் தான் நெல் வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. வங்கியிலிருந்து, கடனை கட்டச் சொல்லி நெருக்கடி கொடுக்கின்றனர். என்ன செய்வதென்று புரியவில்லை.இவ்வாறு அவர் கூறினார்.பொது விநியோகத் திட்டத்துக்கு சிக்கல்: நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும், 100 கிலோ மூடை நெல்லுக்கு, அரசு 1,357 ரூபாய் தருகிறது. நடப்பாண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், உற்பத்தியான சொற்ப நெல்லையும் வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்ய விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். இந்த நெல்லை அரைத்து தான், பொது விநியோகத் திட்டத்துக்கு அரிசியாக வழங்கப்பட்டு வந்தது. நெல் உற்பத்தி பாதிப்பாலும், வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்ய விவசாயிகள் முடிவு செய்துள்ளதாலும், பொது விநியோகத் திட்டத்துக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## ஈரோட்டில் விவசாயிகள் மாநாடுஇந்திய மக்கள் இயக்கம் தகவல்

கரூர்: "ஈரோட்டில் வரும் மார்ச் மாதம், 30ம் தேதி காவிரி விவசாயிகள் மாநாடு நடத்துவது' என, இந்திய மக்கள் இயக்க ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்திய மக்கள் இயக்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், கள அமைப்பாளர் நல்லசாமி தலைமையில் நடந்தது. கூட்டத்தில், தேங்காய் பருப்பு கொள்முதல் விலையை தமிழக அரசு அதிகரித்தல், சென்னையை தவிர மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டதற்கு வரவேற்பு தெரிவித்தல், வரும் மார்ச் மாதம், 30ம் தேதி ஈரோட்டில் காவிரி விவசாயிகள் மாநாடு மற்றும் பயனாளிகள் மாநாடு நடத்துதல், காவிரிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணுதல், வரும், 28ம் தேதி கள் இறக்க அனுமதி குறித்த கோரிக்கையை நிலை நிறுத்த, அஸ்வமேத இயக்கம் நடத்துதல் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கரும்பு சாகுபடியாளர்கள் சங்க தலைவர் நல்லசாமி, கள் இயக்க அமைப்பாளர் டாக்டர் இளங்கோ, இந்திய மக்கள் இயக்க அமைப்பாளர் கோபிநாத், தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகி மாரப்பன் உட்பட பலர், ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## பயறு விதைகளின் ஈரப்பதத்தை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

திருவள்ளூர்:பயறு விதைகளை சேமித்து வைக்க, விதைகளின் ஈரப்பதம் குறித்து பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என, வேளாண்துறை அறிவுறுத்தி உள்ளது.

தற்போது, சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து மற்றும் பச்சை பயறுகள்

அறுவடைக்கு தயாராக உள்ளன.

அறுவடை செய்த விதைகளை, சரியான ஈரப்பதத்தில் விவசாயிகள் சேமித்து வைத்தல் அவசியம்.

ஈரப்பதம் மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில், விதை உடைந்து விடும் நிலை உருவாகி, முளைப்புத் திறன் பாதிக்கப்படும்.

ஈரப்பதம் அதிகமாக இருக்கும்

பட்சத்தில், பூஞ்சாணை நோய்கள்

தாக்கும். அதிக நாட்கள் சேமித்து வைக்க முடியாது.

அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட உளுந்து மற்றும் பச்சை பயிரில், 9

சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டியது அவசியம்.

எனவே, விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் விதையை சேமிக்கும் போது, விதையின் ஈரப்பதத்தை சோதனை செய்ய, விதை மாதிரி ஒன்றை எடுத்து, திருவள்ளூர், பெரியகுப்பம், ஜே.என்.சாலையில் உள்ள விதை

பரிசோதனை மையத்துக்கு சென்று

பரிசோதித்துக் கொள்ளலாம். இதற்கு கட்டணம், 30 ரூபாய் செலுத்த வேண்டும்.

இத்தகவலை, திருவள்ளூர் விதை

பரிசோதனை ஆய்வக, வேளாண்மை

அலுவலர் முத்து பெருமாள் தெரிவித்து உள்ளார்.

## விவசாய கிணறுகளில் இருந்து குடிநீர் பெறும் அவலம்

ஆர்.கே.பேட்டை:குடிநீர், சாலை வசதி இல்லாததால், தும்மல்கண்டிகை கிராமத்தினர், விவசாய கிணறுகளில் இருந்து, தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

ஆர்.கே.பேட்டை அடுத்து உள்ளது, தும்மல்கண்டிகை கிராமம். இங்கு, 15 குடும்பத்தினர் வசிக்கின்றனர். பள்ளிப்பட்டு - சோளிங்கர் சாலையில் இருந்து, அப்பல்ராஜி கண்டிகைக்கு இணைப்பு சாலை அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த சாலையில் இருந்து, தும்மல்கண்டிகைக்கு இணைப்பு ஏற்படுத்தவில்லை. முட்புதருக்கு

இடையே உள்ள, மண் பாதை வழியாக பொதுமக்கள், நெடுஞ்சாலைக்கு வருகின்றனர். ஊருக்குள் சிமென்ட் சாலை இருந்தும், வெளியூருக்கு செல்ல, சாலை வசதி இல்லை என, பொதுமக்கள் புலம்புகின்றனர்.

இந்நிலையில், மேல்நிலை குடிநீர் தொட்டி அல்லது மினி டேங்க் என, எந்தவிதமான குடிநீர் வசதியும் இந்த ஊரில் கிடையாது.

கடந்த, 1990களில், அமைக்கப்பட்ட, ஆழ்துளை கிணறு பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. இதை சீரமைக்கவும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வட்டார வளர்ச்சி அலுவலக அதிகாரி ஒருவர் கூறுகையில், "நேரில் ஆய்வு செய்வு அடிப்படை வசதிகள் விரைந்து செய்து தரப்படும்,' என்றார்.

## மிருகண்டா அணையில்பாசனத்துக்கு நீர் திறப்பு

திருவண்ணாமலை: கலசப்பாக்கம் அருகே மிருகண்டா அணையிலிருந்து பாசனத்திற்கு நேற்று நீர் திறந்துவிடப்பட்டது.கலசப்பாக்கம் அடுத்த மிருகண்டா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மிருகண்டா அணையின் நீர் முழு கொள்ளளவு, 22.73 அடியாகும், தற்போது தண்ணீர் இருப்பு, 12.36 அடியாக உள்ளது அதாவது,37.14 மில்லியன் கன அடி உள்ளது. தமிழக அரசு அப்பகுதி விவசாயிகள் பாசன வசதி பெறும் வகையில் நேற்று முன்தினம் முதல் வரும், 18ம் தேதி வரை, 8 நாட்களுக்கு நீர் திறந்துவிட உத்தரவிட்டது. இதன்படி அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் அணையிலிருந்து நேற்று முன்தினம் நீரை திறந்து வைத்தார். கலெக்டர் விஜய் பிங்ளே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பருத்தி சந்தையில் ரூ. 3 கோடிக்கு கொள்முதல் விவசாயிகள் மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் விலை பட்டியல் ஒட்டாமல் எடை போட்டதால் விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை தோறும் பருத்தி வாரச்சந்தை நடந்து வருகிறது. நேற்று நடந்த சந்தையில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்து 316 விவசாயிகள் 20 ஆயிரம் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

திருப்பூர், அன்னூர், வாழப்பாடி, திண்டுக்கல், தேனி, மகுடஞ்சாவடி, கொங்கனாபுரம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர்.

நேற்று நடந்த சந்தையில் எல்.ஆர்.ஓ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 4,349 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 3982க்கும் விலை போனது.

சுவீன் பஞ்சு ரகம் குவிண்டால் அதிகபட்சம் 5,216 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 4,812க்கும் விலை போனது. நேற்று நடந்த சந்தையில் மொத்தம் 3 கோடி ரூபாய் மதிப்பிலான பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது.

வாரச்சந்தையில் அதிகளவில் மூட்டைகள் வந்திருந்ததால் நேற்று மாலை 4.30 மணி வரை விலைப் பட்டியல் ஒட்டாமல் எடைப்போட்டுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் விலை பட்டியல் ஒட்டிய பிறகு எடைபோட வலியுறுத்தி கச்சேரி சாலையில் மாலை 5 மணிக்கு மறியலில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து விவசாயிகளை அதிகாரிகள் சமாதானப்படுத்தி அழைத்துவந்தனர். பின்னர் விலைப்பட்டியல் ஒட்டப்பட்டது.

அதில் விலை குறைவாக பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டதாக கூறி மீண்டும் 5.50 மணிக்கு விவசாயிகள் மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த இன்ஸ்பெக்டர் விவேகானந்தன், சப் இன்ஸ்பெக்டர் பாலசிங்கம் மற்றும் போலீசார் மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதிகாரிகளிடம் பேசி பிரச்னைக்கு தீர்வு காண்பதாக கூறியதையடுத்து மாலை 6.15மணிக்கு மறியல் கைவிடப்பட்டது. இச்சம்பவத்தால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

## அணைக்கட்டு மூலம் நீர்வரத்து பெற்ற ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

தியாகதுருகம்:பருவமழை பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் பெரும்பாலான ஏரிகள் வறண்டு கிடக்கும் நிலையில், அணைக்கட்டில் இருந்து தண்ணீர் பெற்ற சில ஏரிகள் நீர் நிரம்பி காணப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பருவமழை கடந்த ஆண்டு பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் நீர்நிலைகள் வறண்டு கிடக்கிறது. "நீலம்' புயல் உருவானபோது கல்வராயன்மலையில் ஓரளவு மழை பெய்ததால் கோமுகி அணை நிரம்பியது. மணிமுக்தா அணையின் நீர்மட்டம் உயர்ந்தது.

இதையடுத்து இங்கிருந்து பாசனத்திற்காக கால்வாய் மூலம் நீர் திறந்து விடப்பட்டதால் இப்பகுதியில் விவசாயத்திற்கு பெரும் உதவியாக இருந்தது.

அதேபோல் தடுப்பணைகள் நிரம்பியதாலும் அங்கிருந்து கால்வாய்கள் மூலம் இணைப்பு பெற்று வரத்து நீர் பெறும் ஏரிகள் அனைத்தும் நிரம்பின. இதனால் இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம்

உயர்ந்து ஏரி பாசனம் மற்றும் கிணற்று நீர் பாசனம் செழிக்க காரணமாக அமைந்தது.
மழைகாலங்களில் நீரின்றி பல ஏரிகள் பரிதாபமாக காட்சியளிக்கும் நிலையில் தற்போது அவை முற்றிலும் வறண்டு கிடக்கிறது. கால்நடைகள் குடிக்க கூட ஏரிகளில் தண்ணீர் இல்லை.
இந்நிலையில் அணைக்கட்டுகளில் இருந்து நீர் வரத்து பெற்ற தண்டலை, சிறுவங்கூர், நீலமங்கலம் உள்ளிட்ட பகுதியில் ஏரிகள் தற்போது தண்ணீர் நிறைந்து காட்சியளிக்கிறது. இது அப்பகுதி விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
வெயில் காலம் துவங்க உள்ள நிலையில் நீர்நிலைகள் நிரம்பியுள்ளது கோடை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.
இதேபோல், அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகளில் இருந்து மேலும் பல ஏரிகளுக்கு கால்வாய்கள் மூலம் இணைப்பு ஏற்படுத்தி உபரி நீரை தேக்கி வைக்க வழிவகை செய்தால், பருவ மழை பொய்க்கும் காலங்களில் கோடையிலும் நிலத்தடி நீர்மட்டம் குறையாமலும், பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்க முடியும்.

## காட்டுச்சிவிரியில் வேளாண் இயக்குனர் ஆய்வு

திண்டிவனம்:காட்டுச்சிவிரி கிராமத்தில் வேளாண்மை ஆராய்ச்சி இயக்குனர் ஆய்வு நடத்தினார்.
திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் காட்டுச்சிவிரி கிராமத்தில், பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப மீள் தன்மையுள்ள வேளாண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இத் திட்டத்தின் முதன்மை இயக்குனர் வெங்கடேஷ்வரலு, பண்ணைக்குட்டைகள், ஊற்று கிணறுகள், நீர் சேமிப்பு வரப்புகள், மாற்றுப்பயிர்கள், தீவனப்பயிர்கள், உயர் ரக ஆடு வளர்ப்பு மற்றும் பண்ணை கருவிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.
ஊராட்சித்தலைவர் ஏழுமலை, துணைத்தலைவர் சீனிவாசன், குழு தலைவர் மணிவேலன், அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா, திட்ட விஞ்ஞானிகள் ரேணுகா, அன்புமணி, கவிதா மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இனியவன், இளையராஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

## விவசாயிகள் குறைகேட்பு

விழுப்புரம்:விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நாளை நடக்கிறது.
கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு:
விழுப்புரத்தில் நடக்க உள்ள மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்திற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்குகிறார். துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்துகொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

## கறிவேப்பிலை உற்பத்தி பாதிப்பால் விலை உயர்வு

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில் கடும் பனி, வெயில் காரணமாக, கறிவேப்பிலை உற்பத்தி கடுமையாக பாதித்துள்ளது.

ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், வாசனை பயிரான கறிவேப்பிலை, 7,000 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.ஆத்தூர், தலைவாசல் பகுதியில், விளைவிக்கப்படும் கறிவேப்பிலை வாசனையுடன் இருப்பதால், வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செங்கின்றனர். தலைவாசல் தினசரி மார்க்கெட், ஆத்தூர் பகுதியில் இருந்து, தினமும் சேலம், கோவை, திருச்சி, மதுரை, சென்னை, புதுச்சேரி, கேரளா என, பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.பருவ மழையில்லாததால், பாசன வசதியின்றியும், கடும் பனி, வெயிலில் கறிவேப்பிலை செடிகள், காய்ந்து கருகி வருகிறது.

கடும் பனியால், கறிவேப்பிலை செடிகளில் இலைபுள்ளி நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால், செடிகள் முழுவதும் சாம்பல் படிந்தது காணப்படுகிறது.கறிவேப்பிலை உற்பத்தி குறைந்துள்ளதால், கிலோ, 15 ரூபாயில் இருந்து, 25 முதல், 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. விலை உயர்வு இருந்தும், விளைச்சல் இல்லாததால், விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து துலுக்கனூர் கறிவேப்பிலை விவசாயி மோகன்ராஜ் கூறியதாவது:கறிவேப்பிலை செடிகள் நடவு செய்து, 15வது மாதத்தில் இருந்து, அறுவடை செய்யப்படும். மூன்று மாதத்துக்கு, ஒருமுறை ஏக்கருக்கு, நான்கு முதல் ஐந்து டன் வரை, மகசூல் கிடைக்கும். தற்போது, பாசன வசதி இல்லாததால், ஏக்கருக்கு, இரண்டு டன் மகசூல் உள்ளது.

கறிவேப்பிலை உற்பத்தி குறைந்ததால், கிலோ 25 முதல் 30 ரூபாய் வரை, விற்பனையாகிறது. உணவு பொருட்கள் சமைப்பதில் முக்கியத்துவம் பெறும் கறிவேப்பிலை பயிர், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை பட்டியலில் இல்லை. அதனால், அரசு மானியம், கடன் மற்றும் நிவராணம் போன்றவைகள் வழங்குவதில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## தெளிப்பு நீர்பாசனம் அமைக்கமானியம்: வேளாண் அதிகாரி

மோகனூர்: "ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்க, மானியம் வழங்கப்படுகிறது' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன்

தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மோகனூர் வட்டாரத்தில், மழை குறைவாக பெய்திருப்பதாலும், வறட்சி காலங்களில் குறைந்தளவு தண்ணீரை கொண்டு, கூடுதல் பரப்பில் பயிர் சாகுபடி செய்ய தெளிப்பு நீர்பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2012-13ம் ஆண்டுக்கு ஐசோபாம் எண்ணெய்வித்து திட்டத்தின் கீழ், தெளிப்பு நீர்பாசனம் அமைக்க, ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயனடைய விருப்பம் உள்ள ஆதிதிராவிடர் விவசாயிகள் சிட்டா, அடங்கல், நீர் ஆதாரம் மற்றும் நில வரைபடம் ஆகிய ஆவணங்களுடன் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசு வழங்கும் மானியம் ஒதுக்கீடு... குறைவு தோட்டக்கலைப் பயிர் விவசாயிகள் கவலை

கம்பம்: தோட்டக்கலைப் பயிர்களான திராட்சை, வாழை, பந்தல் காய்கறி பயிர்களுக்கான இந்த ஆண்டிற்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.காரணம் தெரியாமல் தோட்டக்கலைத்துறையினர் திகைத்துள்ளனர்.

தென் மாவட்டங்களில், தோட்ட கலை பயிர்கள் அதிகம் சாகுபடியாகும் மாவட்டம் என்ற பெயரை தேனி பெற்றுள்ளது. குறிப்பாக வாழை, திராட்சை, புடலை, பாகற்காய் உள்ளிட்ட பல வகை பயிர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.அதிலும் வாழையும், திராட்சையும் பிற மாநிலங்கள் பின்பற்றக் கூடிய அளவிற்கு நவீன சாகுபடி முறைகளை விவசாயிகள் கையாண்டு வருகின்றனர்.இதற்கென நவீன குளிர்சாதன கிட்டங்கிகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.இந்நிலையில், தேனி மாவட்டத்தில் உள்ள 8 உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும், கடந்த ஆண்டு வழங்கிய ஒதுக்கீட்டை விட பல மடங்கு குறைத்து ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. கம்பம் உதவி இயக்குநருக்கு கடந்த ஆண்டு வாழைக்கு 75 ஹெக்டேர் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு வெறும் 15 ஹெக்டேர் மட்டுமே உள்ளது.உத்தமபாளையம் உதவி இயக்குநருக்கு கடந்த ஆண்டு திராட்சைக்கு 75 ஹெக்டேர் வரை அனுமதிக்கப்பட்டது. இந்த ஆண்டு வெறும் 5 ஹெக்டேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 80 சதவீதத்திற்கும் மேல் ஒதுக்கீட்டில் தோட்டக்கலை ஆணையரகம் கை வைத்துள்ளது. இந்த ஒதுக்கீடு குறைப்பிற்கு பல காரணங்கள் கூறப்படுகிறது.தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: பொதுவாக திராட்சை, வாழை சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. எனவே மாற்றுப் பயிருக்கு வாய்ப்பு வழங்க இந்த

நடவடிக்கையாக இருக்கலாம். அல்லது தானே புயல் தாக்குதலால் கடலூர் உள்ளிட்ட அதை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு முழு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் ஒதுக்கீட்டில் கை வைத்திருக்கலாம்' என்றனர். எது எப்படி இருந்தாலும், தோட்டக்கலை மாவட்டம் என்று பெயர் பெற்றுள்ள தேனி மாவட்டத்திற்கு இந்த ஆண்டு தோட்டக்கலை பயிர்களுக்கு அரசு அனுமதித்துள்ள ஒதுக்கீடு, விவசாயிகளை மட்டுமின்றி தோட்டக்கலைத்துறையினரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இதனால் இந்த பயிர்கள் சாகுபடியில் விவசாயிகள் கடுமையான பின்னடைவை சந்திக்க வேண்டியது வரும்.

## அணைக்கட்டு மூலம் நீர்வரத்து பெற்ற ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

தியாகதுருகம்:பருவமழை பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் பெரும்பாலான ஏரிகள் வறண்டு கிடக்கும் நிலையில், அணைக்கட்டில் இருந்து தண்ணீர் பெற்ற சில ஏரிகள் நீர் நிரம்பி காணப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பருவமழை கடந்த ஆண்டு பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் நீர்நிலைகள் வறண்டு கிடக்கிறது. "நீலம்' புயல் உருவானபோது கல்வராயன்மலையில் ஓரளவு மழை பெய்ததால் கோமுகி அணை நிரம்பியது. மணிமுக்தா அணையின் நீர்மட்டம் உயர்ந்தது.

இதையடுத்து இங்கிருந்து பாசனத்திற்காக கால்வாய் மூலம் நீர் திறந்து விடப்பட்டதால் இப்பகுதியில் விவசாயத்திற்கு பெரும் உதவியாக இருந்தது.

அதேபோல் தடுப்பணைகள் நிரம்பியதாலும் அங்கிருந்து கால்வாய்கள் மூலம் இணைப்பு பெற்று வரத்து நீர் பெறும் ஏரிகள் அனைத்தும் நிரம்பின. இதனால் இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து ஏரி பாசனம் மற்றும் கிணற்று நீர் பாசனம் செழிக்க காரணமாக அமைந்தது.

மழைகாலங்களில் நீரின்றி பல ஏரிகள் பரிதாபமாக காட்சியளிக்கும் நிலையில் தற்போது அவை முற்றிலும் வறண்டு கிடக்கிறது. கால்நடைகள் குடிக்க கூட ஏரிகளில் தண்ணீர் இல்லை.

இந்நிலையில் அணைக்கட்டுகளில் இருந்து நீர் வரத்து பெற்ற தண்டலை, சிறுவங்கூர், நீலமங்கலம் உள்ளிட்ட பகுதியில் ஏரிகள் தற்போது தண்ணீர் நிறைந்து காட்சியளிக்கிறது. இது அப்பகுதி விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வெயில் காலம் துவங்க உள்ள நிலையில் நீர்நிலைகள் நிரம்பியுள்ளது கோடை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகளில் இருந்து மேலும் பல ஏரிகளுக்கு கால்வாய்கள் மூலம் இணைப்பு ஏற்படுத்தி உபரி நீரை தேக்கி வைக்க வழிவகை செய்தால், பருவ

மழை பொய்க்கும் காலங்களில் கோடையிலும் நிலத்தடி நீர்மட்டம் குறையாமலும், பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்க முடியும்.

## உரங்களை சிறிய பாக்கெட்டுகளில் விற்க அனுமதி




புதுடில்லி:யூரியா அல்லாத இதர உரங்களை, சிறிய பாக்கெட்டுகளில் அடைத்து விற்க, மத்திய அரசு, அனுமதி வழங்கியுள்ளது.இதையடுத்து, டை- அம்மோனி யம் பாஸ்பேட் (டீ.ஏ.பி), முரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.,), ஆகிய உரங்கள், இனி, 5 கிலோ, 10 கிலோ, 25 கிலோ மற்றும் 40 கிலோ பாக்கெட்டுகளில் கிடைக்கும்.கடந்த, 2011ம் ஆண்டு, ரபி பருவத்திற்கு பிறகு, யூரியா அல்லாத இதர உர வகைகளின் விலை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், நாட்டின் பல மாநிலங்களில் உள்ள பல விவசாயிகளால், 50 கிலோ மூட்டையில் அடைக்கப்பட்ட, உரங்களை வாங்க முடியாமல் உள்ளது.இதன் காரணமாக, யூரியா அல்லாத உர வகைகளின் நுகர்வு குறைந்து போயுள்ளதுடன், விவசாயத்தில் உரங்களை பயன்படுத்துவதும் சரிவடைந்து வருகிறது.

இது, உர விற்பனையையும், வேளாண் உற்பத்தியையும், பாதிப்பதாக உள்ளது.இதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, மேற்கண்ட உர வகைகளை, சிறிய பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்ய, அனுமதி அளித்துள்ளதாக கூறப்படுகிறது.சிறிய பாக்கெட்டுகளில், உரங்களை அடைத்து விற்பனை செய்யும் நிலையில், விவசாயிகள் தேவையான அளவிற்கு, உரங்களை வாங்கி பயன்படுத்த தொடங்குவர் என்ற, எதிர்பார்ப்பு நிலவுகிறது.கடந்த ஒரு சில ஆண்டுகளில், ஒரு டன் டீ.ஏ.பி., உரத்தின் விலை, 18,200 ரூபாயிலிருந்து, 24 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. எம்.ஓ.பி உரத்தின் விலை, 12 ஆயிரம் ரூபாயிலிருந்து, 17 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது.இவை தவிர, ஒரு டன் சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் (எஸ்.எஸ்.பி) உரத்தின் விலை, 4,800 ரூபாயிலிருந்து, 7,800 ரூபாயாகவும், காம்ப்ளக்ஸ் உரத்தின் விலை, 16 ஆயிரம் ரூபாயிலிருந்து, 22 ஆயிரம் ரூபாயாகவும் உயர்ந்து உள்ளன.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.02.2013 A.M**

---

## மா சாகுபடி கருத்தரங்கு

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் மா சாகுபடி குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. திருச்சி தோட்டக்கலை மகளிர் கல்லூரி முதல்வர் பாலமோகன், மண்டல மேலாளர் பாலமுருகன், ராஜ்குமார், பயோஸ் டெட் நிறுவன உற்பத்தி நிர்வாகி மதுரை ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கில், போச்சம்பள்ளி பகுதி மா உற்பத்தியாளர்கள் சங்க தலைவர்கள் நக்கிரன், புலவர். கிருஷ்ணன், சாந்தகுமார், செந்தில் சண்முகம், ஜெயகோபி, ஜெகதீசன் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்

## வாழைத்தார் குறைந்த விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் விரக்தி

கரூர், : கரூர் வாழைத்தார் கமிஷன் மண்டியில் வாழைத்தார் குறைந்த விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் விரக்தியடைந்தனர்.

கரூர் ரயில்வே நிலையம் செல்லும் வழியில் வாழைத்தார் கமிஷன் மண்டி உள்ளது. குளித்தலை, லாலாப்பேட்டை, சேங்கல், வாங்கல், வேலாயுதம்பாளையம் போன்ற பகுதிகளில் இருந்தும், நாமக்கல் மாவட்டம் வேலூர், காட்டுப்புத்தூர் போன்ற பகுதிகளில் இருந்தும் மொத்த மாக வேன்களில் வாழைத்தார்கள் கொண்டு வரப் பட்டு ஏலம் விடப்படுகிறது. இதனை மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்று விற் பனை செய்து வருகின்றனர். தொடர் முகூர்த்தம் காரணமாக வாழைத்தார்கள் நேற்று அதிக விலைக்கு ஏலம் போகும் என எதிர்பார்த்த நிலையில் வழக்கத்துக்கு மாறாக குறைந்த விலைக்கே ஏலம் போனது. பூவம்பழ தார் 300க்கும், ரஸ்தாளி வகைகள் ரூ.200க்கும், கற்பூரவள்ளி ரூ.150 வரையில் மட்டுமே ஏலம் போனது. அதிக விலைக்கு ஏலம் போகும் என எதிர்பார்த்து வந்த வாழை விவசாயிகள் விலை குறைவு காரணமாக விரக்தியடைந்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் 6 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் துவரை அறுவடை துவக்கம்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் வத்தல்மலை, அன்னசாகரம், லளிகம், பொம்மிடி, முத்தம்பட்டி, காரிமங்கலம் உள்பட பல்வேறு பகுதிகளில் 6 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரை பயிர் மானாவாரியாக பயிரிடப்படுகிறது.

துவரை பயிர் பழைய முறையான விதைகளை தூவுவதன் மூலம் விதைக்கப்பட்டது. இந்நிலையில் துவரை சாகுபடியில், விவசாயிகள் அதிக லாபம் பெறும் நோக்கத்தில் தர்மபுரி மாவட்ட வேளாண்மை துறை சார்பில், நாற்று விட்டு நடவு செய்யும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய தொழில்நுட்ப முறையில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 2,342 ஹெக்டேர் பரப்பளவிலும், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1000 ஹெக்டேர் பரப்பளவிலும் துவரையை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். தற்போது துவரை அறுவடை சீசன் என்பதால், மாவட்டம் முழுவதும் அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.

இதையொட்டி தர்மபுரியை அடுத்த எர்ரனஅள்ளி பகுதியில் விளைந்த துவரை பயிர்களை அறுவடை செய்து மணிகளை உதிர்க்கும் பணிக்காக, சாலையோரங்களில் வெயிலில் காயவைக்கின்றனர். இது குறித்து மாவட்ட வேளாண் துணை இயக்குனர்(பொ) இம்மானுவேல் கூறும் போது, தர்மபுரி மாவட்டத்தில் 6 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது நவீன தொழில்நுட்பத்தின் மூலம் நாற்றுவிட்டு நடவு செய்யும் முறை மானியத்துடன் செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் 2,200க்கும் மேற்பட்ட விவசாயிகள் 3ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிற்கு துவரை சாகுபடி செய்துள்ளனர். இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு `15 ஆயிரம், `7.5 ஆயிரம், `5 ஆயிரம் என 3 விதமாக மானியம் வழங்கப்படுகிறது.  வழக்கமான சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு துவரை 200 கிலோ மட்டுமே மகசூல் கிடைக்கும். நவீன தொழில்நுட்பத்தால் ஒரு ஏக்கருக்கு ஒரு டன் வரை மகசூல் கிடைக்கிறது.

எனவே விவசாயிகள் இந்த முறையின் மூலம் கூடுதல் பயன் அடைய முடியும் என்றார்.

## காவிரியில் நீர் திறந்துவிடாத கர்நாடக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு



புதுடெல்லி : நீதிமன்ற உத்தரவின்படி தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தர மறுக்கும் கர்நாடக அரசு மீது உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளது. பருவமழை பொய்த்ததால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் குறுவைச் சாகுபடியை முற்றிலும் இழந்த நிலையில் சம்பா பயிரையும் இழக்கும் நிலையில் உள்ளனர். காவிரியில் தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிடக் கோரி தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், " சம்பா பயிர்களை காப்பாற்ற தமிழகத்துக்கு கர்நாடக அரசு 2.44 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விட வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

அதன்படி கர்நாடகா காவிரியில் திறந்துவிட்டதாக கூறுகிறது. ஆனால் 5 நாட்களாகியும் தண்ணீர் தமிழகம் வந்து சேரவில்லை. பொதுவாக, கேஆர்எஸ் அணையில் தண்ணீர் திறந்துவிட்டால் அது 48 மணி நேரத்தில் தமிழக எல்லையை வந்தடையும். ஆனால் கர்நாடகா திறந்த தண்ணீர் தமிழகத்துக்கு இன்னும் வந்து சேரவில்லை.

இதையடுத்து, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நிபுணர்கள் குழு நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவடங்களில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில்தான் தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் திறந்து விடுமாறு உத்தரவிடப்பட்டது. ஆனால், இதுவரை மேட்டூர் அணைக்கு ஒரு நாளைக்கு 124 கியூஸக்ஸ் என்ற அளவிலேயே காவிரியிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

இதே நிலை நீடித்தால் 2.44 டிஎம்சி தண்ணீர் மேட்டூருக்கு வர 220 நாட்கள் ஆகும். எனவே, நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாத கர்நாடக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவும், கர்நாடக அரசு தாக்கல் செய்த மனுவும் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

### 15ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சித்திரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 15ம்தேதி மாலை 3 மணிக்கு கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள ஊரக வளர்ச்சி முகமை கூட்டங்களில் நடக்கிறது. இதில் வேளாண்மை துறை மற்றும் சார்புதுறை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். எனவே, விவசாயிகள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இன்றைய வேளாண் செய்திகள்

14.02.2013 A.M

## விவசாயிகள் பயிர் காப்பீட்டு பிரீமியத்தொகைக்கு மானியம் கலெக்டர் அன்சுல்மிஸ்ரா அறிவிப்பு

மதுரை

விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யும் பிரீமியத்தொகைக்கு மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் அன்சுல் மிஸ்ரா அறிவித்துள்ளார்.

மானியம்

இது குறித்து மதுரை மாவட்ட கலெக்டர் அன்சுல்மிஸ்ரா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறிஇருப்பதாவது:–

மதுரை மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் வறட்சி நிலையை கருத்தில் கொண்டும், எதிர் பாராத விதமாக பெரு மழை வெள்ளத்தால் பயிர்கள் சேதமடையும் தருணங்களிலும் அதற்கான இழப்பீட்டு தொகையை பெறும் வகையில் விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பீடு செய்து பயன் பெற வேண்டும். நடப்பு ரபி பருவத்திற்கான பயிர் காப்பீட்டு திட்ட பதிவு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. அதற்கான பிரீமியத் தொகையில் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 55 சதவீதமும், கடன் பெறாத இதர விவசாயிகள் மற்றும் கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியத் தொகையில் 50 சதவீதமும் அரசு மானியமாக அளிக்கிறது.

காப்பீடு

நடப்பு கோடை வரை பருவ நெல், உளுந்து, பாசி பயறுக்கு 15.02.2013 மற்றும் கரும்புக்கு 15.04.2013 அல்லது விதைத்த, நடவு செய்த ஒரு மாதம், இதில் எது முன்னதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும். மேலும் பயிர் சாகுபடி செய்துள்ள பிர்கா மேற்காணும் பயிர்களுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும்.பயிர் காப்பீடு செய்வது தொடர்பாக மேலும் விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வேளாண்மை விரிவாக்க

மையங்களையோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களையோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளையோ விவசாயிகள் அணுகலாம்.இவ்வாறு அவர் கூறி உள்ளார்.